பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 03 ஞாயிற்றுக்கிழமை 20.10.2024 கதிர் 347



## அமைச்சர் ஹேரத்தை சந்திக்க அனுமதி கேட்டார் கம்மன்பில

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரத்தில் திருப்பம்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில தன்னிடமுள்ள மிக முக்கியமான பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான ஆவணங்களை கையளிப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தினை சந்திப்பதற்கு அனுமதி கோரியுள்ளதை தொடர்ந்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த ஆவணங்களை மறைத்த விவகாரத்தில் திடீர் திருப்பம் ஏற்பட்டுள்ளது.

பாதுகாப்பு அடிப்படையில் மிகவும் முக்கியமான ஆவணங்களை பகிரங்கப்படுத்துவதற்கு தயாரில்லை என தெரிவித்துள்ள உதயகம்மன்பில இதன் காரணமாக அமைச்சரை தொலைபேசியில் தொடர்புகொள்ள முயன்றார் என்று தெரிவித்துள்ளார். இதன் பின்னர் அமைச்சருக்குகுறுஞ்செய்தியைஅனுப்பினார் எனவும் அதற்கும் பதில் இல்லை என்றும் உதயகம்மன்பில தெரிவித்துள்ளார். ☞8

## இது ரகசியம் அல்ல!

மாவை சேனாதிராசா நேற்று மாலை மாரடைப்பு அறிகுறிகள் காரணமாக யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டார். அவரது ஈசீஜி சோதனையில் வழக்கத்துக்கு மாறான பதிவுகள் காணப்பட்டதன் காரணமாக அவருக்கு சிறியளவில் மாரடைப்பு ஏற்பட்டிருக்கலாமோ என்ற அவச்சத்தில் அவர் தொடர் மருத்துவக் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்.

நேற்றிரவே அவர் வழமைக்குத் திரும்பி முழுச் சுயநினைவோடு மற்றவர்களுடன் பேசிச் சிரித்தார் என்று மருத்துவமனைவட்டாரங்கள் தெரிவித்தன. நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளர் சுமந்திரன் மற்றும் வலி வடக்கு பிரதேச சபை சுகிர்தன் ஆகியோர் சென்று பார்த்தபோது அவர்களுடன் அவர் நன்றாகவே உரையாடினார்.

கடந்த சில ☞2

## வாகனங்களை ஒப்படைக்கும்படி மகிந்த ராஜபக்சவுக்கு உத்தரவு

முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்பட்ட மூன்று பாதுகாப்பு வாகனங்களையும் ஆளும்தரப்பிடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தினால் கடிதம் மூலம் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி தங்காலையில் உள்ள அவரது வீட்டில் தங்கியுள்ளதால், அவர் கொழும்பு வந்த பின்னர் வாகனங்கள் கையளிக்கப்படவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி தொடர்பான ☞8

### ஒரு மேதையாக இருந்தாலும்

## அநுரவால் மட்டும் நாட்டை கட்டியெழுப்பிவிட முடியாது

### பிரதமர் ஹரினி தெரிவிப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஒரு மேதை, ஆனால் அவரால் மாத்திரம் நாட்டை கட்டியெழுப்ப ☞8

## 290 முறைப்பாடுகள்

பொதுத்தேர்தலுடன் தொடர்புடைய 290 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டவிதிகளை மீறியமை தொடர்பிலேயே குறித்த சகல முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் குறித்த முறைப்பாடுகளில் 211 முறைப்பாடுகளுக்குத் தீர்வு வழங்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ☞8

# மேட்டுக்குடி பிரபுத்துவ அரசியலை மு.காவிலிருந்து ஒழிக்கவேண்டும்

### முன்னாள் எம்.பி. ஹரிஸ் கல்முனையில் கர்ஜிப்பு

**முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் மேட்டுக்குடி, பிரபுத்துவ அரசியலை இல்லாமல் செய்ய வேண்டும். தலைவர் அஸ்ரப் பழைய அரசியல் கலாசாரத்தை துடைத்து எறிந்தார். அதேபோன்று இப்போது கட்சியில் உள்ள மேட்டுக்குடி அரசியலையும், சொகுசு வாழ்க்கையையும் துடைத்தெறியவேண்டும் என்று மு.கா. பிரதித் தலைவர் ஹரிஸ் தெரிவித்தார்.**

**முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரிஸ் தனக்கு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பு வழங்காமைக்கான காரணத்தை மக்களுக்கு விளக்கும் வகையில், 'அநீதிக்குள்ளான மண்ணுக்காக உங்களோடு பேச வருகிறார் ஹரிஸ்' எனும் தலைப்பில் கல்முனை கடற்கரை வீதியில் நடத்திய பொதுக் கூட்டம் வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணி முதல் இரவு 09.50 வரை நடைபெற்றது. இதில் உரையாற்றிய முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்** ☞2

## துப்பாக்கிகளை ஒப்படைப்பதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு

தனிநபர்கள் அனுமதிப்பத்திரத்துடன் வைத்திருக்கும் துப்பாக்கிகளை மீளக் கையளிக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பை இரத்துச் செய்யக்கோரி மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வர்த்தகரான எச்.டி.நவீன் இந்திக்க டி சில்வா சார்பில் சட்டத்தரணி சரத் விஜயவர்த்தனவால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில் பாதுகாப்பு ☞8

## வெடிகுண்டுப் பீதி இந்திய விமானம் தரையிறக்கம்

வெடிகுண்டு அச்சுறுத்தல் காரணமாக இந்திய விமான நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான விமானம் ஒன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று ☞2



## வடக்கு கிழக்கில் தமிழ் பிரதிநிதித்துவம் கிடைப்பதே இப்போது பெரும் கேள்வி

### இப்படிச் சொல்கிறார் ஜீவன் தொண்டமான்

வடக்கு கிழக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பையே இல்லாமல் போய்விட்டது. வடக்கு கிழக்கில் தமிழ் பிரதிநிதித்துவம் கிடைப்பதே பெரும் கேள்விக்குறியாகியுள்ளது. எனவே, நுவரெலியா மாவட்டத்தில் எமது தமிழ் பிரதிநிதித்துவத்தை நாம் பாதுகாக்க ☞8

## சர்வதேசம் பாராமுகமாக இருக்கக்கூடாது இந்தியா பச்சோந்தி மாதிரி நடக்கக்கூடாது

### வன்னி மாவட்ட வேட்பாளர் ரவிகரன் விளாசல்

வடகிழக்கு தமிழர் தாயகம் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும். சர்வதேசம் பாராமுகமாக இருக்கக்கூடாது. இந்தியா பச்சோந்தி தனமாக இருக்க கூடாது என்று வன்னி தேர்தல் மாவட்ட வேட்பாளர் ரவிகரன் தெரிவித்தார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வு வவுனியா நகரசபை மண்டபத்தில் இன்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அபிவிருத்தியோடு எமது தீர்வை நோக்கி பயணிப்பதே எமது இலக்கு. எமது நிலம் இருந்தால் மாத்திரமே அந்த ☞8

## அரச ஊழியர் சம்பளத்தால் செலவுகள் 6.7% அதிகரிப்பு

2024ஆம் ஆண்டில் முதல் எட்டு மாதங்களில் அரச ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக ஆளும்தரப்பு பெருந்தொகை பணத்தை செலவிட்டுள்ளதாக ☞2

## யாழ். மாவட்ட வேட்பாளர் ஒருவரினது செலவெல்லை ரூ. 38 லட்சம் மட்டுமே

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்ற அனைத்து அரசியல் கட்சிகள், சுயேச்சை குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் தேர்தல் பரப்புரைகளுக்காக மாவட்ட ரீதியாக செலவிடக் கூடிய தொகையை தேர்தல்கள் ஆணைக்குழு நிர்ணயித்துள்ளது.

2023 இலக்கம் 3 எனும் தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கான செலவு எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைவாக, கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் 57 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை செலவு செய்ய முடியும் என்பதோடு தேசிய பட்டியல் உறுப்பினர் ஒருவர் ☞8

காலைக்கதிர்
Kalaikkathir

# செலவு அறிக்கை தர தவறினால் 3 ஆண்டுகளுக்கு தகுதி இழப்பர்

## தேர்தலில் போட்டியிட முடியாது என்கிறது பவ்ரல்

நாடாளுமன்றத் தேர்தல் நிறைவடைந்த பின்னர், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களது செலவு அறிக்கையை சமர்ப்பிக்கத் தவறினால் அவர்கள் மூன்று ஆண்டுகளுக்குத் தேர்தல் உரிமையை இழக்க நேரிடும் என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரலின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது: பொதுத் தேர்தலுக்கான தேர்தல் பரப்புரை ஆரம்பத்திலிருந்து அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் வாக்காளர்களுக்காக செலவிடக் கூடிய அதிகபட்ச நிதி தொடர்பிலான அறிக்கையை வைத்திருக்க வேண்டியது அவசியம்.

தேர்தல்கள் ஆணைக்குழு இந்த விடயத்தில் மிகவும் உன்னிப்பாக நடந்து கொள்வது அவசியமாகும். கண்காணிப்புக் குழு என்ற வகையில், வேட்பாளர்கள் இந்த விடயத்தில் பொறுப்புக்கூறுவதற்கான செயற்பாடுகளுக்கு நாம் வெளியில் இருந்து அழுத்தங்களையும் ஆதரவினையும் வழங்குவோம் என்றார்.

## இனி இது .....

காலமாகவே முதுமை மற்றும் நோயல் பாதிக்கப்பட்டிருந்தவரான மாவையை மருத்துவர்கள் ஓய்வெடுக்கப் பணித்திருந்தனர். எனினும் கடந்த இரு நாள்களாக தமிழ் அரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்திற்கு வந்திருந்த அவர் கட்சியின் தேர்தல் அறிக்கை தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தார்.

வெள்ளிக்கிழமை கட்சி அலுவலகத்திற்கு வந்த அவர், சுமந்திரனை அழைத்து தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக் குறித்து ஆலோசித்துள்ளார். வழக்கமாகவே கட்சியின் தேர்தல் அறிக்கையைத் தயாரிப்பவர் சுமந்திரன்தான். எனவே இம்முறையும் அவரையே அதனைத் தயாரிக்கும்படி கேட்டுக்கொண்டதுடன். அதில் தற்போதைய சூழலில் செய்யப்படவேண்டிய மாற்றங்கள் என்று தான் எண்ணுபவைகள் குறித்தும் சுமந்திரரனுக்கு விளக்கினார். அவற்றைக் குறித்துக்கொண்ட சுமந்திரன் ரர்தல் அறிக்கைப் பணிகளைத் தான் பார்த்துக்கொள்வார் என்று உறுதியளித்தார்.

அப்படியிருந்தும் நேற்று சனிக்கிழமையும் மாவை அலுவலகத்திற்கு வந்திருந்தார். அப்போது சுமந்திரன் வடமராட்சியில் தேர்தல் பணிகளில் இருந்ததால் அவரால் அலுவலகத்திற்கு வரமுடியவில்லை. தேர்தல் அறிக்கையில் சேர்க்கப்படவேண்டிய விடயங்கள் சிலவற்றை அலுவலகத்திலிருந்த உதவியாளர் மூலம் 'ரைப்' செய்து மின்னஞ்சலில் சுமந்திரனுக்கு அனுப்பி வைத்துவிட்டு வீட்டுக்குச் சென்றிருந்தார். அதன் பின்னர் அவரது ஒரு கையில் விறைப்பு ஏற்பட்டதை அடுத்தும் நெஞ்சில் இலோசான வலி ஏற்பட்டதை அடுத்தும் அவர் உடனடியடாக தனியார் வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் அவரது உடல்நிலை இயல்பாகவே இருக்கின்றது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலகிவிட்டேன் என்று அறிவித்துவிட்டு, நோய்வாய்ப்பட்ட நிலையிலும் கட்சி அலுவலகத்திற்கு வந்திருந்து பணியாற்றி இப்போது மீண்டும் நோய்வாய்ப்பட்டிருப்பது குறித்து கட்சியினர் ஆச்சரியத்துடன், "என்னதான் நடக்கிறது?" என்று அங்கலாய்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

அவரது அரசியல் நிலைப்பாடுகள் மீதான விமர்சனங்களுக்கு அப்பால் அவர் உடல் நலத்துடன் வீடுதிரும்பவேண்டும் என்பதுதான் தமிழர்களின் விருப்பம்.

........................

கிழக்கில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்குள் மீண்டும் ஒரு பூகம்பம் கிளம்பியிருக்கிறது. தமிழ்த் தேசியக் கட்சிக்கும் அதன் தலைவர் சிறீகாந்தாவுக்கும் ரெலோ உள்ளடி வேலைகள் மூலம் கழுத்தறுத்ததினால் உட்சிதைவுக்கு உள்ளாக்கி மீள் ஒருங்கிணைவுக்கு உள்ளாக முடியாமல் திணறும் அந்தக் கூட்டணியில் மீண்டும் ரெலோவினாலேயே குழப்பம் ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் புளொட் மூலம் உள்நுழைந்து நாடாளுமன்ற உறுப்பினராகிய வியாழேந்திரன் பின்னர் ராஜபக்சக்கள் பக்கம் தாவி ஓடினார். ரணில் வந்ததும் அவருடன் ஒட்டிக்கொண்டு இராஜாங்க அமைச்சர் பதவியையும் எடுத்தார். எனினும் இந்தத் தேர்தலில் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தபால்பெட்டி சின்னத்தில் வேட்புமனு தாக்கல் செய்தார். அது நிராகரிக்கப்பட்டுவிட்டது.

அதையடுத்து, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் ககூட்டணியில் போட்டியிட ரெலோ செயலாளர் ஜனாவை நாடினார். ஆனால் அவரது கோரிக்கையை ஜனா நிராகரித்துவிட்டார். வியாழேந்திரன் ராஜபக்சக்களுடனும் ஆளும் தரப்பிலும் இருந்ததைக் காரணம் காட்டி அவரைத் தங்களுடன் சேர்த்துக்கொள்ள முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்.

அப்படியிருந்தும் அந்தக் கூட்டணிக்கே தனது ஆதரவு என்று வியாழேந்திரன் இரண்டு நாட்களுக்கு முன்னர் அறிவித்திருந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் பேசிய ஜனா அவரது ஆதரவை ஏற்றுக்கொள்கின்றோம் ஆனால் அவருடன் எந்த ஒப்பந்தமும் இல்லை என்று அறிவித்தார். இதுதான் இப்போது அங்கே குழப்பத்திற்குக் காரணம்.

வேட்பாளர் வாய்ப்பு தரமாட்டேன் என்று நிராகரித்த ஒரு கட்சிக்கு எப்படி ஆதரவு தரமுடியும் என்று வியாழேந்திரன் தரப்பில் அரைவாசிப் பேர் போர்க்கொடி தூக்கியுள்ளனர். அதேபோன்று வேட்பாளர் வாய்ப்புக் கேட்டபோது, நீ கொழும்பு அரசின் ஆள் என்று நிராகரித்த ஒருவரின் ஆதரவை ஏற்றுக்கொள்கின்றேன் என்று ஜனா எப்படி அறிவிக்க முடியும் என்று ரெலோவுக்குள்ளும் எதிர்ப்புக்கொடி. இருவரும் சேர்ந்து என்ன நாடகமாடுகிறார்கள் என்று கொதித்துப்போயுள்ள இரு தரப்பு ஆதாரவாளர்களும் இந்தத் தேர்தலிலேயே இவர்களுக்குப் பாடம்படிப்பது என்று கங்கணம் கட்டிக்கொண்டுள்ளார்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மேட்டுக்குடி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம்.ஹரிஸ் மேலும் தெரிவித்ததாவது:

என்னை நாடாளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்பதற்காக இக்கூட்டத்தை நடத்தவில்லை. தலைமைத்துவத்திற்கு அழுத்தம் கொடுத்து தேசிய பட்டியலில் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக வேண்டுமென்பதற்காக இக்கூட்டத்தை நடத்தவில்லை. எனக்குத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பு மறுக்கப்பட்டதையும், அந்த அநீயாயத்திற்கு மக்கள் விளக்கம் கேட்டதற்கும் அமையவே இக்கூட்டத்தை நடத்துகிறேன்.

கட்சியில் தலைவர் எனக்கு தேசிய பட்டியல் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என்று அறிவித்து இருந்தார். என்னோடு அதுபற்றிப் பேசிவிட்டுத்தான் அதை அறிவித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. தலைவரை புனாணையில் சந்தித்ததன் பின்னர் மீண்டும் ஒரு தடவை நான் சந்திக்கவில்லை.

நான் தேசியப் பட்டியலுக்காகவோ அமைச்சர் பதவிக்காகவோ அரசியல் செய்பவனல்லன். ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் என்னைக் கட்சியிலிருந்து இடைநிறுத்தி வைத்தீர்கள். அது தொடர்பில் 7 உலமாக்கள் உங்களோடு பேசினார்கள். ரணிலுடன் பெற்றுக் கொண்ட நிதியை இடைநிறுத்தினால் நிதியை பெற்றுக் கொண்ட பாடசாலைகளும் பள்ளிவாசல்களும் விளையாட்டுக் கழகங்களும்தான் பாதிக்கப்படும். அதனால் ஹரிஸின் மீதான தடையை நீக்குமாறு கேட்டுக் கொண்டதோடு, அவருக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிக்கவேண்டு என்றும் கேட்டார்கள். அதனை ஏற்றுக் கொண்டீர்கள். இந்த வாக்குறுதி புனாணையில் வைத்து மீறப்பட்டது.

பின்னர் கட்சியின் செயலாளர் நான் சஜித் பிரேமதாஸவுக்கு வேலை செய்யவில்லை. அதனால்தான் தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பு வழங்கவில்லை என்று சொன்னார். சஜித்தின் தேர்தல் பரப்புரைக்காகக் கல்முனை, மருதமுனை போன்ற பல இடங்களில் நான் கூட்டம் நடத்தினேன். அந்தக் கூட்டங்களை பூதங்களா நடத்தியது என்று கேட்கின்றேன்.

நாடாளுமன்றத் தேர்தலில் சஜித் வகுத்த வியூகத்தை உங்களால் வெல்ல முடியவில்லை. சஜித் றிசாட் பதியூதீன் சொல்வதைத்தான் கேட்கிறார். ரவூப் ஹக்கீமின் சொல்லைக் கேட்பதில்லை. நான் மட்டக்களப்பில் மரத்தில் தேர்தல் கேட்டால் தோற்றுவிடுவேன். டெலிபோனில் கேட்டால்தான் வெற்றி பெறுவேன். இதைத் தலைவரிடம் சொல்லுங்கள் என்று ஹிஸ்புல்லாஹ் அழுதார்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் மரத்தில் போட்டியிடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. அப்போது நான் சொன்னேன். சில வேட்பாளர்களுக்கு தேர்தலில் தோற்றுவிடுவோம் என்ற பயம் இருக்கிறது. அதனால், அம்பாறை மாவட்டத்தில் இரண்டாவது விரும்பு வாக்குகளை எடுப்பவருக்கு தேசியப் பட்டியலில் வாய்ப்பை வழங்குங்கள் என்றேன். அப்போது தவம், அப்படியாக இருந்தால் தலைவர் அம்பாறையில் தேர்தல் கேட்க வேண்டும் என்றார்.

இதன் பின்னர் சிலரின் அழுத்தங்கள் காரணமாகத்தான் ஹரிஸிற்கு தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பு வழங்கவில்லை என்று தலைவர் சொல்லுகிறார்.

அப்படியாக இருந்தால் உங்களின் எடுபிடியாகவுள்ள உதுமாலெப்பையும் எதற்காக எனக்கு டிக்கட் கொடுக்கக் கூடாதென்று சொல்லுகிறார் என்று கேட்டேன். அதனால் இ இதன் பின்னணியில் நீங்கள் இருப்பதாகவே நான் சந்தேகிக்க வேண்டியேற்படும் என்றேன்.

சிஸ்டம் மாற்றப்படவேண்டுமென்று மக்கள் அநுரவோடு அலையாக இருக்கின்றபோது நீங்கள் இன்னும் 5 வருடங்களுக்கு எதிர்க்கட்சியில்தான் இருக்கப் போகின்றீர்கள். நீங்கள் ஜே.வி.பி. ஆட்களைச் சீண்டிக் கொண்டிருக்கின்றீர்கள். ஜனாதிபதி அநுரவோடு முரண்பட்டுக் கொண்டிருக்கின்றீர்கள். உங்களை மக்கள் தூரமாக்கிவிடுவார்கள். இக்கட்சியை அழித்துவிடாதீர்கள் என்றேன். இறுதியில் எனக்கு டிக்கட் இல்லையென்றே சொன்னார்.

இதை அறிந்து ரணில் என்னோடு பேசினார். தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பு தருவதாகக் கூறினார். தேசியப் பட்டியல் பற்றியும் சொன்னார். நான் அதற்குச் செவிசாய்க்கவில்லை. நான் நினைத்திருந்தால் ஒப்பமிட்டு ரணிலோடு இணைந்து போட்டியிட்டிருக்க முடியும்.

நமது அரசியலிலும் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினரைப் பெற்றுக் கொள்வதற்காகத்தான் அரசியல் கட்சி என்ற நிலையை மாற்றவேண்டும். அந்த மாற்றத்தை ஒருவர் கொண்டவரவேண்டும். ஜே.வி.பி காரர்கள் எவ்வளவு தியாகத்தைச் செய்துகொண்டிருக்கிறார்கள். 3 நாடாளுமன்ற உறுப்பினரைக் கொண்டவர்கள். இன்று ஜனாதிபதியாக வெற்றி பெற்றுள்ளனர்.

ஆகவே, நமது கட்சியில் இருந்தும் மேட்டுக்குடி பிரபுத்துவ அரசியலை இல்லாமல் செய்யவேண்டும். ஜே.வி.பியில் ஜனாதிபதி அனுர தனித்து எந்த முடிவையும் எடுக்க முடியாது. தலைவர் அஸ்ரப் பழைய அரசியல் கலாசாரத்தை துடைத்து எறிந்தார். அதேபோன்று இப்போது கட்சியில் உள்ள மேட்டுக்குடி அரசியலையும், சொகுசு வாழ்க்கையையும், தங்களின் பிள்ளைகளுக்கு சிங்கப்பூரிலும் இகொழும்பில் பல இடங்களிலும் வீடுகளை வாங்கி வைத்துள்ள அரசியல் கலாசாரத்தை இல்லாமல் செய்யவேண்டும். இதைச் செய்ய வேண்டுமென்றால் யாரோ ஒருவர் தன்னை தியாகம் செய்தாக வேண்டும்.

கடந்த ஒன்றரை வருடமாக உங்களின் நடவடிக்கைகளை பார்த்துக் கொண்டிருக்கிறேன். அந்த நடவடிக்கைகள் எனக்கு பிடிக்கவில்லை. அதனால் உங்களுக்கு டிக்கட் தர முடியாது என்று தலைவர் ரவூப் ஹக்கீம் புனாணையில் வைத்துச் சொன்னார்.

எதற்காக என்னுடைய நடவடிக்கைகள் பிடிக்கவில்லை? அவர் 6 ஜனாதிபதி தேர்தலில் ஆதரவு வழங்கியதில் 5 தேர்தல்களில் தோல்வியடைந்தோம். இந்த வேளைகளில் நான் சில வியூகங்களைச் சொல்லியுள்ளேன். அதனால் அவருக்கு என்னுடைய நடவடிக்கைகள் பிடிக்கவில்லை.

முஸ்லிம் காங்கிரஸில் யார் நாடாளுமன்ற உறுப்பினராக வந்தாலும் நீங்கள் அமரப்போவது எதிர்க்கட்சியில். நாடாளுமன்றத்தில் ஹரிஸிற்கு ரணில் இருந்ததைப் போன்று, ஜனாதிபதி அனுரகுமார உங்களுக்காக இருக்கப்போவதில்லை. அவரைக் கேவலப்படுத்தியற்காக 200 மில்லியன் ரூபாய் நஸ்டஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். எங்களின் நடவடிக்கைகள் ஆட்சியாளர்களைக் கோபப்படுத்துகின்றபோது ஒரு நாடாளுமன்ற உறுப்பினரல்லர் 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தாலும் முஸ்லிம்களையும், கல்முனை நகரத்தையும் காப்பாற்ற முடியாது.

இவர்களின் திட்டம் ஒன்றேதான். அதாவது கல்முனைத் தொகுதியில் ஹரிஸ் நாடாளுமன்ற உறுப்பினராக வரக் கூடாதென்பதாகும். அதனால்தான் மரத்தில் போட்டியிடுவதற்கும் எனக்கு மறுக்கப்பட்டது. இந்த கொந்தராத்தை இவர்கள் வெளிநாட்டிலிருந்து பெற்றுள்ளார்கள்.

20ஆவது திருத்தத்திற்கு வாக்களிக்காது விட்டால் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டதையும் தடுத்திருக்க முடியாது. கல்முனையையும் பாதுகாத்திருக்க முடியாது.

ரணிலின் இரண்டரை வருட ஆட்;சியில் உங்களை பழிவாங்க முற்பட்டபோது மன்றாடி உங்களை காப்பாற்றினேன். உன்னை அமைச்சராக்கப் போகிறேன். கட்சிக்கு தலைவராக்கப் போகிறேன். நீ இன்னமும் ஹக்கீம் என்று சொல்லுகிறாயே என்று ரணில் என்னைக் கடிந்துகொண்டார்.

கல்முனைத் தொகுதியில் எங்களின் முன்னாள் தலைவர் ஒரு சிங்கமாக இருந்தார். அந்த சிங்கம் இருந்த இடத்தில் ஒரு பால் போத்தலை கொண்டுவந்து நிறுத்தியுள்ளீர்கள். மறைந்த தலைவரின் மகன் அமான் அஸ்ரப் வேறு கட்சியில் போட்டியிட முடியாது. அவருக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று சொல்லி இருந்தால் நான் விலகி இருப்பேன்.

## வெடிகுண்டுப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரையிறக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

விமானத்திலிருந்த 240 பயணிகளும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். அதன் விமானத்தில் குண்டு ஏதாவது இருக்கின்றதா என்று முழுமையாகச் சோதனையிடப்பட்டது.

## அரச ஊழியர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இந்த அதிகரிப்பு 6.7 சதவீதமாகப் பதிவாகி இருப்பதாகவும் அறிக்கை கூறுகின்றது.

கடந்த ஆண்டு (2023) முதல் எட்டு மாதங்களில் அரச ஊழியர் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளின் தொகை 61,806.6 கோடி ரூபாவாகும்;. இந்த ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் (2024) அது 65,950.2 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

இந்தச் அதிகரிப்பிற்கு முக்கியக் காரணம், ஜனவரி 2024 முதல் வாழ்க்கை செலவுக் கொடுப்பனவாக 5000 ரூபா அதிகரிக்கப் பட்டமைதான் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

34 ஆயிரத்து 698 ரூபாயைச் செலவுசெய்ய முடியும்.

அதேநேரம், யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் 38 இலட்சத்து 59 ஆயிரத்து 580 ரூபாயைச் செலவு செய்ய முடியும் என்பதோடு தேசியப் பட்டியல் உறுப்பினர் 10ஆயிரத்து 227ரூபாவை மட்டுமே செலவிட முடியும். இதன்படி அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவொன்று 2 கோடியே 34 இலட்சத்து 30ஆயிரத்து 888 ரூபாயையே செலவிடமுடியும்.

வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் 16 இலட்சத்து 73 ஆயிரத்து 243 ரூபாயைச் செலவு செய்யமுடியும் என்பதோடு தேசியப் பட்டியல் உறுப்பினர் 4 ஆயிரத்து 327 ரூபாயை மட்டுமே செலவிடமுடியும். அதேநேரம் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவொன்று

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# தமிழரை வழிநடத்துத் துரநோக்கற்றோர் கட்சிச் சின்னத்துக்காக அங்கலாய்ப்பு

## சிறீரங்கேஸ்வரன் நகைப்பு




ஒருமித்துபயணிக்கமுடியாதவர்கள் எல்லாம் இன்று சிதறுண்டு சின்னங்களை நம்பி சின்னங்களுக்கு அங்கலாய்த்துக்கொண்டிருக்கின்ற நிலை காணப்படுகிறது என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

தத்தமது சுயநலக் கருத்துக்களை தமிழ் மக்கள் அரசியல் பரப்பில் திணித்துவந்த இதர தமிழ் அரசியல்வாதிகள் இன்று எமது வழிமுறையான அரசியல் தீர்வுடன் அன்றாட பிரச்சினையும் அபிவிருத்தியும் தமிழ் மக்களுக்கு வேண்டும் என கருத்துக்களை முன்வைக்க தொடங்கியுள்ளனர். இதனூடாக அவர்களிடம் தமிழ் மக்களை வழிநடத்துவதற்கான தூரரோக்குப்பார்வை இல்லை என்ற நிலையே காணப்படுகின்றது.

அந்த வகையில் எம்மை பேரம்பேசும் சக்தியாக நாடாளுமன்றம்செல்லமக்கள்ஆணைவழங்கினால் நிச்சயம் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அனைத்து பிரச்சினைகளுக்குமான தீர்வுகளை எம்மால் எட்ட முடியும். அதனை வெற்றிகொள்ளும் வகையிலான பொறிமுறையும் எம்மிடம் உள்ளது.

இதேநேரம்ஒற்றையாட்சிவேண்டாம்சமஸ்டியே வேண்டும் என கோஷமிடுபவர்கள் இன்று அதே ஒற்றையாட்சி முறையிலான தேர்தலில் தமக்கு அதிகளவான அங்கத்தவர்கள் கிடைக்க வேண்டும் என அலைகின்றார்கள். இதிலிருந்து தெரிகிறது அவர்களது நிலைப்பாடுகள்.

அமையப்போகும் நாடாளுமன்றில் நாம் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற நிலைப்பாட்டிலிருந்தே செயற்படுவோம். எமது கொள்கையில்எந்தமாற்றமும்இருக்கப்போவதில்லை.

தமிழ் மக்களின் அரசியல் ரீதியான பலத்தை எமக்கு வழங்குவார்களாயின் மத்திய அரசுகளின் அந்த நிலைப்பாட்டை நிர்பந்தம் கொடுத்து எம்மால் மாற்றியமைக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது.

எமது இந்த நம்பிக்கைக்கு எமது கட்சியின் இணக்க அரசியலும் இன நல்லிணக்கமும் மத்தியுடன் நாம் கொண்டுள்ள சோரம் போகாத நிலைப்பாடுமே காரணமாக இருக்கிறது.

இதேவேளை அனுபவம் வாய்ந்தவர்கள் அல்லது இளைஞர்களுக்கு அப்பால் தமிழ் மக்களின் பிரச்சினைகளை விளங்கிக்கொண்டவர்கள் அதனை தீர்க்கவேண்டும் என்ற அக்கறையுடன் இருப்பவர்கள் யார் என்பதுதான் இங்கு முக்கியம் பெறுகிறது.

எனவே, தமிழ் மக்களின் அரசியல் புலத்தின் மாற்றம் என்பது இதன் அடிப்படையில் அது எம்மை நோக்கிய எமது கட்சியின் வீணை சின்னத்தை நோக்கிய அணிதிரள்வானதாகத்தான் இம்முறை அமையும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. – என்றார்.(05)

# நாடாளுமன்றத் தேர்தல்களுக்கான முன்னாயத்தச் செயலமர்வு யாழில்



எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல்கள் தொடர்பாக கிராம அலுவலர்களுக்கான முன்னாயத்த செயலமர்வானது யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும்தெரிவத்தாட்சிஅலுவலருமானமருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை மு.ப 09.00 மணிக்கும் 11.00 மணிக்கும் இரண்டு கட்டங்களாக நடைபெற்றது.

இதன் போது தலைமையுரையாற்றிய தெரிவத்தாட்சி அலுவலர் –

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கடமைக்கு சிறப்பான ஒத்துழைப்பு வழங்கிய கிராம அலுவலர்களுக்கு தமது நன்றிலயத் தெரிவித்தார்.

மேலும், இக் கலந்துரையாடல் ஒரு பின்னூட்டலாகவே நடைபெறும் எனவும், சனாதிபதித் தேர்தல் கடமைகளில் கற்றுக் கொண்ட பாடங்களுக்கமைய நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல்கள் கடமைகளில் வினைத்திறமையாக பங்களிப்பினை வழங்குமாறும் கேட்டுக்கொண்டதுடன், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் செல்லுபடியற்ற வாக்குகள் அதிகமாகவிருந்த காரணத்தினால் வாக்காளர்களுக்கானவிழிப்புணர்வுச்செயற்பாடுகளை பிரதேச செயலக ரீதியாக வெளிக்கள உத்தியோகத்தர்கள் மூலம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதால் அதற்கான ஒத்துழைப்பினையும்கிராமஅலுவலர்கள் வழங்குமாறும் அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக வாக்களிப்பு நிலையங்களில் கிராம அலுவலகர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உதவி தேர்தல் ஆணையாளர் இ.கி.அமல்ராஜ் விளக்கமளிக்கப்பட்டது.

இச் செயலமர்வில் அனைத்து கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் கலந்து கொண்டனர்.(05)





# வெளிநாட்டுச் சிகரெட்டுகளுடன் கொள்ளுப்பிட்டியில் சீனர் கைது



கொழும்பு கொள்ளுப்பிட்டி, சமகி மாவத்தையில் சீனப்பொருட்களைவிற்பனைசெய்யும்கடைஒன்றின் களஞ்சியசாலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் சீனப் பிரஜை ஒருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என ஸ்ரீஜயவர்தனபுர மது வரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளின் பெறுமதி பத்தாயிரம் ரூபாஆகும்.

59 வயதுடைய சீனப் பிரஜை ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

(05)

# மத சகவாழ்வுக்கான செயலமர்வு திருகோணமலையில் முன்னெடுப்பு








இலங்கை தேசிய சமாதானப் பேரவைமற்றும்சேவிங்ஹியூமனிட்டி பவுண்டேஷன் இணைந்து திருகோணமலை பிரதேச சர்வ சமயக்குழுவின் மாதாந்த செயலமர்வு புதன்கிழமை திருகோணமலை மாவட்ட சர்வோதய மண்டபத்தில் நடைபெற்றது.

இச்செயலமர்வில் சர்வ சமயப் பெரியவர்கள், கல்வியியலாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள், பெண்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த கலந்துரையாடலானது மத ஒற்றுமையை வலுவூட்டுவதற்காக முன்னெடுக்கப்பட்டது.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஏமாற்றிவிடக்கூடாது

**ஊழல் மற்றும் மோசடி தொடர்பான 400 கோப்புகள் சட்டமா அதிபரிடம் இருப்பதாகவும், அவை அனைத்தும் சட்ட நடவடிக்கைகளுக்காக திறக்கப்படும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தெரிவித்தார்.**

**தங்காலையில் நடைபெற்ற தமது கட்சிக்கு ஆதரவான தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

**சட்டரீதியாகவும், முறையாகவும் இந்த நடவடிக்கைகளை எடுக்க ஆளும்தரப்பு சளைக்காது என்றும் அவர் தெரிவித்தார்.**

**அவர் இப்படி அறிவித்திருப்பது ஆச்சரியத்துக்குரியது அல்ல. கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாகவே ஜேவிபி கட்சியின் முதன்மை அரசியல் கோசமாக ஊழல் மோசடிக்கு எதிரான போராட்டமே இருந்து வருகின்றது. அவர் இப்படி அறிவிக்காமல் விட்டால்தான் ஆச்சரியம்.**

**இப்போது ஆச்சரியத்துக்குரியது என்னவென்றால் அநுர பதவிக்கு வந்து ஒரு மாதம் ஆகிவிட்டபோதும் அந்த 400 கோவைகளும் இன்னும் திறக்கப்படவில்லை என்பதுதான். ஊழல், மோசடிக்கு எதிரான போராட்டத்திற்குத் தலைமை தாங்குவோம் என்று கூறிப் பதவியைப் பிடித்திருக்கக்கூடிய ஓர் ஆட்சி வந்த வேகத்திலேயே இந்தக் கோவைகள் அனைத்தையும் திறந்து அவற்றில் குறைந்தபட்சம் சிலவற்றின் மீதாவது கைது நடவடிக்கைகளை எடுத்திருக்கவேண்டும். ஆனால் அப்படியெதுவும் நடக்கவில்லை.**

**கொலைகள், கடத்தல்கள் தொடர்பான பெருங்குற்றங்களோடு தொடர்புபட்ட 7 வழக்குகளின் விசாரணைகள் மீளத் தொடங்கப்பட்டுள்ளன என்ற விவரமே இதுவரையில் ஆளும் தரப்பால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் ஊழல், மோசடி தொடர்பான 400 கோவைகள் மீண்டும் திறக்கப்படும் என்று அநுர அறிவித்திருப்பது தேர்தலுக்காக மட்டும்தானோ என்று தோன்றுகின்றது.**

**ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களை தேசிய மக்கள் சக்தி தேர்தலை எதிர்கொள்வதற்கான ஓர் உத்தியாக மட்டும் பயன்படுத்துவது மக்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படாது. ஊழல் மோசடியால் மிக மோசமான பாதிப்புக்களை எதிர்கொண்டதன் காரணமாகவும், அதனைத் தாங்க முடியாது போனதன் காரணமாகவுமே மக்கள் தேசிய மக்கள் சக்தியை ஆட்சியில் அமர்த்தினார்கள். இந்தக் குற்றங்களை இனியும் பொறுத்துக்கொள்ளும் பொறுமையை அவர்கள் இழந்துவிட்டார்கள். மட்டுமன்றி இதுவரை அந்தக் குற்றங்களைப் புரிந்தவர்களைத் தண்டிக்கவேண்டும் என்ற கோபத்திலும் உள்ளார்கள். அநுரவும் தேசிய மக்கள் சக்தியும் அவர்களை ஏமாற்றிவிடக்கூடாது.**

# தராக்கி சிவராம் கொலை விசாரணை எதற்காக?

**தெய்வீகன்**

'தராக்கி சிவராம் படுகொலை வழக்கினை மீளத் திறந்து, உரிய நீதியைப் பெற்றுக்கொடுக்கவேண்டும்' என்று ஜே.வி.பி. தரப்பு நீதித்தராசைக் கையில் எடுத்திருப்பதானது, தென்னிலங்கையை நுட்பமாகக் கையாள்வதற்கு அவர்கள் செதுக்கிவரும் பரந்த திட்டத்தின் சாதுரியமான ஒரு சிறு பகுதி.

**இதனைப் புரிந்கொள்வதற்கு குறுகிய வரலாற்று ரீ விசிட் ஒன்று அவசியமானது.**

மாமனிதர்கள் ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம், சண்டே லீடர் ஆசிரியர் லசந்த உள்ளிட்ட பலரது படுகொலைகள் மற்றும் டெய்லி மிரர் பாதுகாப்பு நிலவரப் பத்தியாளர் கீத் நொயர் உட்பட பலரது கடத்தல்களை நடத்தியவர்கள் 'த்ரிபொலி' என்ற பெயரில் இயங்கிய - கோட்டாவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் செயற்பட்ட – இராணுவத்தின் விசேட புலனாய்வுக் குழுவினர். சந்திரிகா ஆட்சியில் சிறுகுழந்தையாக உருவாகிய இந்தக் குற்றக்குழு கோட்டாவின் கீழ் அகோரமாகக் களத்தில் இயங்கியது. ஊடகச் சுதந்திரத்தை அடக்குவதற்கும் பேச்சுரிமையை ஒடுக்குவதற்கும் கோட்டா இந்தப் படுகொலைப் படையணியைப் பயன்படுத்திவந்தார். இறுதிப்போரில் இடம்பெற்ற கொடிய அழிவுகளை வெளியிட அனுமதிக்காமல், அதனை ஒரு இருண்ட யுத்தமாகவே நடத்தி முடித்ததற்கு இந்த அணியினரின் பங்கு அளப்பெரியது.

**இவையெல்லாம், ஏழெட்டுவருடங்களுக்கு முன்னர் அம்பலத்துக்கு வந்த விடயங்கள்.**

அந்தக் காலப்பகுதியில், கோட்டபாயவின் நிர்வாகத்தின் கீழ் இடம்பெற்ற மிக் விமான ஊழலை, சண்டே லீடர் பத்திரிகை அம்பலத்துக்கு கொண்டுவந்தபோது, 'இதற்குப் பிறகும் இவர்களை விட்டுவைக்கமுடியாது' என்று லசந்தவைப் போட்டுத் தள்ளியது இந்த 'த்ரிபோலி' குழு. இது பாரியளவில் ராஜபக்ஷ தரப்பை தென்னிலங்கையில் வளைத்துப்பிடித்தது. லசந்தவில் கை வைத்தது பிழை என்பதை கொஞ்சம் லேட்டாகவே உணர்ந்தார்கள். உடனே, கோட்டா ஒரு நாடகத்தை அரங்கேற்றினார். தனக்கும் இந்தக் கொலைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதுபோலவும் தான் நீதியின் பாதையில்தான் அனைத்தையும் செய்பவர் என்பதாகக் காண்பிக்கவும் மிக் விவகாரத்தில் சண்டே லீடரின் மீது மான நஷ்ட வழக்குப் போட்டார். அந்த வழக்கில், சண்டே லீடர் சார்பில் வழக்கில் ஆஜரானவர் சுமந்திரன். அதிகாரத்தின் உச்சத்தில் கோட்டபாய இருந்தபோது - நாடு முழுவதும் இரகசிய இராணுவ ஆட்சியை அவர் நடத்திக்கொண்டிருந்தபோது – அவரை சுமந்திரன் நீதிமன்றக் கூண்டிற்குக் கொண்டுவந்தார். அன்று, தென்னிலங்கையே சுமந்திரனை எழுந்து நின்று பார்த்தது. கோட்டபாய மீதான சுமந்திரனின் குறுக்கு விசாரணையைப் பார்வையிடுவதற்கு அப்போது ஊடகவியலாளர்களே நீதிமன்றத்துக்கு அனுமதிக்கப்படவில்லை. அவ்வளவுக்கு நீதிமன்றப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால், வழக்கின் தொடர்ச்சியில் நீதிபதிகளே வெளியேறிக்கொள்ளுமளவுக்கு அரசியல் அழுத்தங்கள் அதிகரித்தன. லசந்த இல்லாத நிலையில், சண்டே லீடரும் அந்த வழக்கினைத் தொடர்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டது. ஈற்றில், அந்த வழக்குக் காலமாகியது.

ஆனால், அன்றுடன் சுமந்திரன் கோட்டாவின் மிகப்பெரிய எதிரியானார். 'த்ரிபொலி' அணியின் அடுத்த இலக்கு சுமந்திரன்தான் என்பது அன்றைய காலப்பகுதியில் கிட்டத்தட்ட உறுதியாக எதிர்பார்க்கப்பட்டது. கொழும்பிலும் ஊடக மட்டத்திலும் அது எல்லோரது அச்சமாகவும் இருந்தது. அவரது நாள்கள் கிட்டத்தட்ட எண்ணிபட்டுக்கொண்டிருந்த காலப்பகுதி அது.

ஆனால், 2015 ஜனவரி தேர்தல் அனைத்தையும் ஆச்சரியப்படும் வகையில் ஊதி அணைத்தது. மைத்திரி ஆட்சிக்கு வந்தார். தென்னிலங்கையே மைத்திரியின் துரோகத்தையும் அவர் ஆட்சிக்கு வந்த ஸ்டைலையும் பார்த்து வாயைப் பிளந்துகொண்டு, அவர் அப்பம் சாப்பிட்ட கதைகளைப் பரிமாறிக்கொண்டிருந்தது.

நாடாளுமன்றத்தில் ராஜபக்ஷக்களின் நடமாட்டமிருந்தபோதும் அவர்களது பழைய காட்டாட்சி முடிவுக்கு வந்தது. எதையும் வெளிப்படையாகப் பேசவும் பாதிக்கப்பட்ட பாமர மக்கள் நீதிமன்றம் போகவும் சூழல் கனிந்தது. அப்போதுதான், 'த்ரிபொலி' அணி பற்றிய தகவல்கள் ஒவ்வொன்றாக அம்பலமாயின. லசந்த முதற்கொண்டு அத்தனை கொலைகளிலும் நேரடியாகப் பங்குகொண்டவர்களை நெறிப்படுத்தியவர்களுடனான தொலைபேசி உரையாடல்கள் நீதிமன்றுக்கு வந்தன. இறுதியாக, இந்தக்குழுவிலிருந்த முன்னாள் இராணுவத்தினர் ஐவர் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

ஆனால், 2019 இல் கோட்டாபாய ஆட்சிக்கு வந்ததுடன், இந்த 'த்ரிபொலி' அணியினர் விடுவிக்கப்பட்டார்கள். போதாக்குறைக்கு, அதில் சம்பந்தப்பட்ட முக்கிய அதிகாரி ஒருவர் மீண்டும் இராணுவ சேவையிலும் இணைத்துக்கொள்ளப்பட்டார். 'ஈஸ்டர் குண்டுவெடிப்புக்குப் பிறகு நாட்டின் பாதுகாப்பு நிலைகெட்டுக் கிடப்பதால், முன்பு 'சிறப்பாக' செயற்பட்ட படையினரை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளவேண்டும்' என்று காரணம் கூறப்பட்டது. (எப்படிப்பட்ட ராஜபக்ஷக்களின் ஆட்சியின் கீழ் சிறுபான்மை மக்கள் இலங்கையில் வாழ்ந்து மீண்டாரகள் என்பதைத் தெளிவுபடுத்துவதற்கு இதைவிட ஒரு உதாரணம் தேவையில்லை)

ஆனால், சிறையிலிருந்து வெளியே வந்த முன்னாள் முரடர்கள் இப்போது எங்கே? இந்தப் படுகொலைகளுடன் சம்பந்தப்பட்ட மிகுதி குற்றவாளிகள் எங்கே போன்ற விவரங்கள் இன்றைக்கும் யாருக்கும் தெரியாது. சனங்களின் மறதியோடு நீதியும் காற்றில் கரைந்துபோனது.

இப்போது, ஜே.வி.பியினர் இந்த விவகாரங்களையெல்லாம் ஒட்டுமொத்தமாகக் கிளறினால், ஏகப்பட்ட முன்னாள் இராணுவத்தினரை சிறையில் போடவேண்டிவரும். அவர்களுக்கு எதிரான வழக்குகளை சிறப்பாக நடத்தி, இராணுவ உடையில் அவர்கள் நடத்திய படுகொலைகளையும் கடத்தல்களையும் மீண்டும் விரிவாக அம்பலப்படுத்தவேண்டிவரும். ஆனால், சிங்கள மக்கள் மத்தியில் இந்த நகர்வொன்றும் அவ்வளவு உவப்பானதாக இருக்கப்போவதில்லை. 'யுத்த வீரர்கள்' என்றும் 'பயங்கரவாதத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றிய உத்தமர்கள்' என்றும் ராஜபக்ஷக்களினால் கிரீடம் சூட்டப்பட்டு, தென்னிலங்கையெங்கும் சிலை வைக்கப்பட்டவர்களை, ஜே.வி.பியினர் புறவளமாக போட்டு அடிக்கத் தொடங்கினால், தேசிய மக்கள் முன்னணியினர் தற்போது அறுவடை செய்துவைத்திருக்கும் அத்தனை ஆதரவுத் தளமும் கூண்டோடு சரியும். தெற்கின் பச்சையான உளவியல் இது.

ஆக, மூடி மறைக்கப்பட்ட நீதியைத் திறந்து தரப்போகிறோம் என்று ஜே.வி.பியினர் தற்போது தூக்கியிருப்பது, இராணுவத் தரப்பினர் சம்பந்தமில்லாத - அரசியல் பின்னணிகள் கொண்ட - வழக்குகளையே. அதாவது, சூத்திரதாரிகளைக் கைது செய்வது என்ற சூட்சுமமான ஒரு அட்டவணையை தேர்தலுக்கு முன்னர் ஸ்டண்ட் காட்டுவதற்காகக் கையில் எடுத்திருக்கிறார்கள். அதற்கு, சிவராம் கொலை வழக்கு நன்றாகவே பொருந்திப்போகக்கூடியது. தமிழ் ஊடகவியலாளர் ஒருவரின் படுகொலைக்கு நீதி பெற்றுக்கொடுப்பதாகத் தங்கள் நீதித் தராசையும் அலங்கரித்துக்கொள்ளலாம். அதிகம் அலுப்பில்லாத ஒரு நீதியையும் பெற்றுக்கொடுக்கலாம்.

ஆனால், என்றைக்குமே ஒன்றும் விளங்காத சித்தர், சிவராம் கொலைக்கும் தமது கட்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று சம்மந்தமே இல்லாமல் சங்கு ஊதியிருக்கிறார். குய்யோ முறையோ என்று குழறியிருக்கிறார்.

சித்தரிடம் அன்றைய காலப்பகுதியில் 'புலிகள் வரிசையில் பலரைப் போட்டுத்தள்ளிக்கொண்டு வருகிறார்கள். உங்களது பாதுகாப்புப் பற்றி நீங்கள் பயப்படுவதில்லையா' - என்று கேட்டபோது -

"தம்பி, அவயிண்ட லிஸ்டில நான் இருக்கிறன் எண்டு எனக்குத் தெரியும். ஆனால், நான் பத்தாவதோ பதின்மூன்றாவது ஆளாகத்தான் இருப்பன். அவயள் கதிர்காமரில தொடங்கி ஒவ்வொண்டாப் போட்டுக்கொண்டு வரட்டுமன். அதுக்குள்ள நான் ஒரு வழியப் பாப்பம்' -

என்று சொன்ன கியூட்டான ஆயுதக்குழுத் தலைவர்.

அந்தாளுக்கு சிவராமைத் தெரிந்திருப்பதே ஆச்சரியம்தான்.

© https://web.facebook.com/theivigan.panchalingam

# ரனூஸ் மக்கள் காங்கிரஸில் இணைவு

கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் முன்னாள் தலைவரும், சம்மாந்துறை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினருமான சம்மாந்துறையைச் சேர்ந்த சட்டத்தரணி எம்.ஐ.எம்.றனூஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இணைந்து கொண்டார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட செயற்குழுவின் செயலாளர் எம்.எம்.ஏ.காதர் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் கட்சியின் அம்பாறை மாவட்ட வேட்பாளருமான ஐ.எல்.மாஹிர் முன்னிலையில், அவரது சம்மமாந்துறை காரியாலயத்தில் இணைந்து கொண்டார்.

சட்டத்தரணி றனூஸ், ஆரம்பத்தில் முஸ்லிம் காங்கிரஸ் ஊடாக சம்மாந்துறை பிரதேச சபையின் உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்டார்.

இறுதியாக அவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப்புடன் மிகவும் நெருக்கமாக இருந்துகொண்டு அவரின் அரசியலில் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தார்.

அந்தக் காலப்பகுதியிலேயே கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தலைவராக றனூஸ் நியமனம் பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(05)

# வலப்பனையில் திடீர் சுகவீனமுற்ற 21 மாணவர்கள் வைத்தியசாலையில்

நுவரெலியா, வலப்பனை, படகொல்ல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 21 மாணவர்கள் திடீர் சுகவீனமுற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சுகவீனமுற்ற மாணவர்கள் வலப்பனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலையில் வழங்கப்பட்ட காலை உணவு ஒவ்வாமை காரணமாக மாணவர்கள் இவ்வாறு சுகவீனமுற்றுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

சுகவீனமுற்ற மாணவர்களின் உடல் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

(05)

# கொழும்பு - மட்டக்களப்பு இடையே தொடருந்து சேவைகள் வழமைக்கு



கொழும்பு - கோட்டைக்கும் மட்டக்களப்புக்கும் இடையில் இரத்து செய்யப்பட்டிருந்த ரயில் சேவை சனிக்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கல்லோயா - ஹிங்குரான்கொடை ரயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் வெள்ளிக்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் யானைகள் கூட்டம் ஒன்று எரிபொருள் ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது, ரயிலானது தடம் புரண்டதோடு, விபத்தில் சிக்கி இரண்டு காட்டு யானைகள் உயிரிழந்தன. இதனையடுத்து, மட்டக்களப்பு - கொழும்பு பிரதான ரயில் மார்க்கத்தில் ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டன.

இந்நிலையில், தடம் புரண்ட ரயில் சீர்செய்யப்பட்டதையடுத்து தற்போது மட்டக்களப்பு - கொழும்பு பிரதான ரயில் மார்க்கத்தில் ரயில் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.(05)

# பேருந்து - ஓட்டோ மோதி விபத்து



பெரகல, வெல்லவாய வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பஸ்ஸை முந்திச் செல்ல முற்பட்ட ஓட்டோ ஒன்று முன்னால் வந்த பஸ்ஸுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த ஓட்டோ சாரதி ஹல்துமுல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக தியத்தலாவ ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

ஹப்புத்தளை அக்கராசிய பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது ஓட்டோவில் தனது மனைவி மற்றும் குழந்தையுடன் பெரகலைக்கு சென்றுள்ளார். மனைவி தங்கநகையை மூலம் பணம் பெற்று கணவர் மது அருந்தியதாகக் கூறப்படுகிறது.

இதனால் கோபமடைந்த மனைவி திரும்பிச் சென்றபோது ஓட்டோவில் ஏறாமல் பெரகல - அக்கராசிய பஸ்ஸில் வந்துள்ளார்.

அங்கு ஓட்டோவை அதிவேகமாக ஓட்டிக் கொண்டு பஸ்ஸின் பின்னால் கணவர் வந்துள்ளார். இதேவேளை, பெரகல - வெல்லவாய வீதியின் கல் கந்த பிரதேசத்தில், எதிரே வந்த வெல்லவாய - பண்டாரவளை பஸ்ஸுடன் மோதியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹப்புத்தளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனமை குறிப்பிடத்தக்கது.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த இந்தியக் கடற்படைக் கப்பல் 'கல்பேனி'



இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான 'ஐஎன்எஸ் கல்பேனி' என்ற கப்பல் நேற்று (சனிக்கிழமை) கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த இக்கப்பலை இலங்கைகடற்படையினர்சம்பிரதாயபூர்வமாகவரவேற்றனர்.

இக்கப்பலின் கட்டளை அதிகாரி சுனில் குல்ஹாரி ஆவார்.

கடலோரக் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளின் முதன்மையாக விளங்கும் இந்த கப்பலின் சேவை 2010 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இலட்சத்தீவுகளில் ஒன்றான கல்பேனி தீவின் பெயரே இந்த கப்பலுக்கு சூட்டப்பட்டுள்ளது.

இந்த கப்பலானது கடத்தல் எதிர்ப்பு நடவடிக்கைகள், கடலோரக் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள், தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுப்படப் பன்படுத்தப்படும்.

இந்த கப்பலானது பல்வேறு தொழில்நுட்ப கருவிகளை நாட்டுக்கு கொண்டுவந்துள்ளது. இந்தப் பொருள்கள் இலங்கை கடற்படையிடம் ஒப்படைக்கப்படும்.

இந்த கப்பலின் பணியாளர்கள் கொழும்பு மற்றும் அதனை சுற்றியுள்ள பல்வேறு இடங்களைக் கண்டுகளிக்கவுள்ளனர். (05)

# ஆடை தொழிற்சாலையில் 35 ஊழியர்கள் திடீர் சுகயீனமுற்று வைத்தியசாலையில்

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள ஆடை தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் 35 ஊழியர்கள் திடீர் சுகவீனமுற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று (சனிக்கிழமை) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

ஊழியர்கள் ஆடை தொழிற்சாலையில் வழங்கப்பட்ட காலை உணவை உட்கொண்ட பின்னர் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்பட்டு திடீரென சுகவீனமுற்றுள்ளனர்.

இதனையடுத்து, சுகவீனமுற்ற ஊழியர்கள் நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் கட்டுநாயக்க பொலிஸார் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# அச்சுவேலி வைத்தியசாலையின் இரத்தப் பரிசோதகரை மாற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டம்



அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் இரத்தப் பரிசோதகரை மாற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேச மக்கள் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலையில் புதிதாக ஆய்வுக்கூடத்தில் இரத்த பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், இந்த பரிசோதகரை தெல்லிப்பழைக்கு மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த வெற்றிடத்துக்கு புதிதாக ஒருவரை நியமிக்க இரண்டு மாதங்களுக்கு மேலாகும் எனக்; கூறப்பட்டுள்ளது.

இதனால் இரத்த மாதிரிகளை வேறிடங்களுக்கு கொண்டுசெல்ல வேண்டும் அல்லது நோயாளர்கள் பணம் கொடுத்து வேறு இடங்களில் பரிசோதனை செய்ய வேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த வைத்தியசாலையில் டெங்கு பரிசோதனை, மலேரியா பரிசோதனை உட்பட பல்வேறு பரிசோதனைகள் அதிகமாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், மாற்றப்படும்பரிசோதனைகளுக்குமாற்றீடாக எவரும் நியமிக்கப்படவில்லை.

எனவே இதற்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும் வைத்தியசாலையில் கடமையில் உள்ளவைத்தியர்களுக்குஎதிராககளவு,ஊழல் மோசடி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும்தெரிவித்துஇந்தஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.(05)

# தெற்கு அதிவேக வீதியில் விபத்து மூவர் காயம்

தெற்கு அதிவேக வீதியில் 153 ஆவது கிலோ மீற்றர் மைல்கல் அருகில் இடம்பெற்ற விபத்தில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தவிபத்துவெள்ளிக்கிழமைஇடம்பெற்றுள்ளது.

மத்தல நோக்கிப் பயணித்த லொறி ஒன்றின் பின்புறத்திலிருந்த சக்கரமொன்று பழுதடைந்ததன் காரணமாக சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த லொறி, வீதியை விட்டு விலகி அருகிலிருந்த பாதுகாப்பு வேலியில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது, லொறியின் சாரதி உட்பட மூவர் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(05)

# இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வன்னி வேட்பாளர்கள் அறிமுகம்



இலங்கைதமிழரசுக்கட்சியின்வன்னிமாவட்டவேட்பாளர் அறிமுகநிகழ்வு வவுனியா நகரசபை மண்டபத்தில் சனிக்கிழமை காலை நடைபெற்றது.



இந்தநிகழ்வுநா.சேனாதிராஜாதலைமையில்நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்திசிறிஸ்கந்தராஜா,முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எம்.பி.நடராஜா, மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

வன்னிமாவட்டத்தில் இம்முறை தமிழரசுக்கட்சி சார்பாக, முன்னாள் மாகாணசபை உறுப்பினர், து.ரவிகரன் வைத்தியர் ப.சத்தியலிங்கம், ஆசிரியர் கா. திருமகன், சமூக செயற்பாட்டாளர் தே. சிவானந்தராசா ஆசிரியர் பா. கலைதேவன், விரிவுரையாளர் ந. ரவீந்திரகுமார், ஓய்வுநிலை தொழில்நுட்பஉத்தியோகத்தர்வ. கமலேஸ்வரன், சட்டத்தரணி செ. டினேசன், சட்டத்துறை மாணவிஅ. கலீபா ஹலிஸ்ரா ஆகியோர் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## 25 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருளுடன் வர்த்தகர் ஒருவர் கைது

25 கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய சுங்க அதிகாரிகளால் வெள்ளிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு , தெமட்டகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய வர்த்தகரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

சந்தேக நபரான வர்த்தகர் மலேசியாவிலிருந்து வெள்ளிக்கிழமை இரவு 11.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதனையடுத்து, சந்தேக நபரான வர்த்தகர் விமான நிலையத்தைவிட்டுவெளியேறமுயன்றபோதுவிமானநிலைய சுங்க அதிகாரிகளால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேக நபரான வர்த்தகர் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்த தேயிலை பொதிகளில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 10 கிலோ 179 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.(05)



# எம்மவர்கள் எதிரணியின் பக்கம் சென்றதால் பலவீனமடைந்தோம்

## நாமல் ராஜபக்ச உருக்கம்



ஜனாதிபதித் தேர்தலின் போது எம்முடன் இருந்தவர்கள் எதிரணி பக்கம் சென்றதால் தான் நாங்கள் அரசியலில் பலவீனமடைந்துள்ளார்கள். விலகிச் சென்றவர்களை மீண்டும் இணைத்துகொள்ளவே முயற்சிக்கிறோம் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றதொகுதிஅமைப்பாளர்களுடனான கலந்துரையாடலின்பின்னர்ஊடகங்களுக்குக்; கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது –

தேர்தலில் வெற்றி மற்றும் தோல்வி என்பது இயல்பானது. வெற்றி, தோல்வியை ஏற்றுக்கொள்ளவேண்டும். பல்வேறு காரணிகளால் ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்தோம். எம்முடன் இருந்தவர்கள் எம்மை விட்டு எதிரணி பக்கம் சென்றதால்; பலவீனமடைந்தோம்.

எம்மை விட்டுச் சென்றவர்கள் தற்போது அரசியலில் நெருக்கடியாகியுள்ளமை கவலைக்குரியது. ஆகவே இவர்கள் எம்முடன் மீண்டும் ஒன்றிணையலாம். அதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கத்துக்கு காலவகாசம் வழங்க வேண்டும். ஜனாதிபதி அதிகாரத்துக்கு வந்து ஒரு மாதம் கூட நிறைவடை யவில்லை. ஆகவே விமர்சனங்களை மாத்திரம் முன்வைக்க முடியாது. சிறந்த திட்டங்களை முழுமையாக வரவேற்பேன்.இயலுமானஒத்துழைப்புக்களை வழங்குவேன்.

அரசாங்கத்தின் அனைத்து செயற்பாடுகளையும் விமர்சித்து அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் நோக்கம் எமக்கு கிடையாது.அரசாங்கம்நெருக்கடிக்குள்ளானால் , அரச நிர்வாகம் பலவீனமடையும் அப்போது மக்கள் தான் நெருக்கடிக்குள்ளாகுவார்கள். ஆகவே சிறந்த அரச நிர்வாகத்துக்கு அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவேன்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தேர்தல் பிரசார மேடைகளில் எம்மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்களை ஆதாரபூர்வமாக நிரூபிக்க வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்துகிறேன். எம்மீதான குற்றச்சாட்டுக்கள் மீது நம்பிக்கை கொண்டே பெரும்பாலானோர் மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். ஆகவே அந்த மாற்றத்தை நடைமுறையில் செயற்படுத்த வேண்டும். - என்றார்.(05)

# படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் 24 ஆவது நினைவேந்தல்





யாழில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்மயில்வாகனம்நிமலராஜனின் 24 ஆவது நினைவேந்தல் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் உள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத்தூபி அருகில் நேற்று (சனிக்கிழமை) நடைபெற்றது.

மட்டக்களப்பு ஊடக மையத்தின் தலைவர் வ.கிருஷ்ணகுமார்தலைமையில் இந்த நினைவேந்தல் நடைபெற்றது.

இதன் போது மயில்வாகனம் நிமலராஜனின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு, நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டதையடுத்துமௌன இறைவணக்கம் இடம்பெற்றது.

இந்த நினைவஞ்சலி நிகழ்வில் மாவட்டத்தின் ஊடகவியலாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப்பலரும்கலந்துகொண்டனர்.

புதிய அரசாங்கத்தின் ஜனாதிபதி கடந்த கால ஆட்சியில் இடம்பெற்ற படுகொலை சம்பந்தமாக விசாரணைகள் நடத்தப்படவுள்ளமையை வரவேற்பதாக இதன்போது தெரிவிக்கப்பட்டதுடன் விசாரணைகளை துரிதப்படுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (05)





காலைக்கதிர் Kalaikkathir

# பொருளாதார நெருக்கடிகளின்போது இந்தியா வழங்கிய உதவிக்கு நன்றி

## விஜித ஹேரத் தெரிவிப்பு




இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட வேளையில்இந்தியாவழங்கிய உதவிக்கு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் நன்றி தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்துள்ள அவர், இரு நாடுகளுக்கும் இடையிலான பல நூற்றாண்டுகால தொடர்புகளைச் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின்போது இந்தியா வழங்கிய உதவிகளையும் கடன் மறுசீரமைப்பின்போது இந்தியா வழங்கிய ஆதரவையும் நினைவுகூருகின்றோம் என்றும் இதன்போது வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.(05)

## யாழ். ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

99 இலட்சத்து 13 ஆயிரத்து 964 ரூபாயை மட்டுமே செலவிட முடியும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் 37 இலட்சத்து 9 ஆயிரத்து 910 ரூபாயைச் செலவு செய்ய முடியும் என்பதோடு தேசியப் பட்டியல் உறுப்பினர் 8 ஆயிரத்து 529 ரூபாயை மட்டுமே செலவிட முடியும். அதேநேரம் அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக்கழுவொன்று 1 கோடியே 95 இலட்சத்து 38 ஆயிரத்து 857 ரூபாயை மட்டுமே செலவிட முடியும்.

திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் 31 இலட்சத்து 14 ஆயிரத்து 118 ரூபாயைச் செலவு செய்யமுடியும் என்பதோடு தேசியப் பட்டியல் உறுப்பினர்6ஆயிரத்து264ரூபாயைமட்டுமே செலவிட முடியும். அதேநேரம் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவொன்று 1 கோடியே 43 இலட்சத்து 50 ஆயிரத்து 893 ரூபாயை மட்டுமே செலவிட முடியும்.

திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்ஒருவர்37இலட்சத்து65ஆயிரத்து 829 ரூபாயைச் செலவு செய்யமுடியும் என்பதோடு தேசியப் பட்டியல் உறுப்பினர் 10 ஆயிரத்து 821 ரூபாயை மட்டுமே செலவிடமுடியும். அதேநேரம் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவொன்று 2 கோடியே 47 இலட்சத்து 91 ஆயிரத்து 707 ரூபாயை மட்டுமே செலவிட முடியும்.

நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்ஒருவர்36இலட்சத்து65ஆயிரத்து 829 ரூபாயை செலவு செய்ய முடியும் என்பதோடு தேசியப்பட்டியல் உறுப்பினர் 11 ஆயிரத்து 480 ரூபாயை மட்டுமே செலவிட முடியும். அதேநேரம் அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவொன்று 2 கோடியே 62 இலட்சத்து 99 ஆயிரத்து 937ரூபாயை மட்டுமே செலவிட முடியும்.

வன்னி மாவட்ட வேட்பாளர் ஒருவரின் தேர்தல்செலவீனம்குறைந்ததாகவும்கொழும்பு மாவட்ட வேட்பாளரின் தேர்தல் செலவீனம் அதிகமானதாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது

## வாகனங்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் இந்தத் தகவலை உறுதிப்படுத்தினார். பயன்படுத்திய சில வாகனங்களை ஒப்படைக்குமாறு அரசாங்கம் கடிதம் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்தநாட்டில்போரைமுடிவுக்குக்கொண்டு வந்த தலைவர் என்ற வகையில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ள எல்லையை குறிக்க முடியாது எனவும், மகிந்தவுக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலை மதிப்பிடாமல் இவ்வாறு செயற்படுவது தவறு எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 290 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் 79 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தலவாக்கலை கிறேட்வெஸ்டன் ஸ்கல்பா பகுதியில் நேற்று நடைப்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த நான்கு வருடகாலமாக மக்களுக்காகவே நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தேன். அதேபோல் மக்களின் பிரச்சினைகளுக்காகக்களத்தில்இறங்கியிருக்கின்றேன். அப்போது நான் செய்தது அராஜக அரசியல் என்றும், நான் கெட்டவன் என்றும் சித்தரித்தார்கள். எமது மக்களை அடிமைகளாக வழிநடத்தியவர்களையேநான்களத்தில்இறங்கி கேள்விக்குள்ளாக்கினேன். எந்த இடத்திலும் நான் ஓடி ஒழியவில்லை. நாடு வங்குரோத்து அடைந்தபோதுகூட, மலையகத்தைப் பொறுத்தவரையில் இரண்டு சம்பள உயர்வுகளைப் பெற்றுக் கொடுத்துள்ளோம். 2020 ஆண்டு சொன்னதுபோல ரூ. 1000 சம்பளத்தையும், 2024ஆம் ஆண்டு சம்பள நிர்ணயசபை ஊடாக ரூ.1350 சம்பளத்தையும் பெற்றுக்கொடுத்தோம்.

சம்பள நிர்ணய சபையில் தொழிலாளர்களுக்கு ரூ.1350 சம்பளம் கொடுக்க கூடாது என தற்போதைய ஜனாதிபதியின் தொழிற்சங்கமே எமக்கு எதிராக வாக்களித்தது. நுவரெலியா மாவட்டத்தில் இந்த முறை 30 சுயாதீன கட்சிகள் சுயேச்சையாக களமிறங்கியுள்ளன. எந்தக் கட்சியாக இருந்தாலும் தமிழ் பிரதிநிதித்துவத்தை பாதிக்கும் வகையிலேயே களமிறக்கப்பட்டுள்ளன.

இ.தொ.கா என்பது ஒரு பொது நிறுவனம். இத்தேர்தலில் எமது மக்கள் நன்கு சிந்தித்து செயற்படவேண்டும். தமிழ்பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கும் வகையில் உங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும். எமது வாக்குகளை சிதறடிக்க இங்கே பலர் வந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு நாம் இடமளிக்கக்கூடாது. கடந்த நான்கரை வருடகாலமாக நாட்டில் ஏற்பட்ட பொருளாதார சிக்கலுக்கு மத்தியில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். தற்போதைய ஜனாதிபதி அதிக வாக்குகளால் வெற்றி பெறவில்லை. அவர் 42% வீத வாக்குகளையே பெற்றார். ஜனாதிபதியால் 113 பெரும்பான்மையை நாடாளுமன்ற தேர்தலில் பெறமுடியாது. அதனாலேயே சிறுபான்மை கட்சிகளை உடைக்க முயற்சிக்கின்றார்.

வடக்கு கிழக்கில் தமிழ் தேசிய கூட்டமைப்பையே இல்லாமல் போய்விட்டது. வடக்கு கிழக்கில் தமிழ் பிரதிநிதித்துவம் கிடைப்பதே பெரும் கேள்விக் குறியாகியுள்ளது. எனவே, நுவரெலியா மாவட்டத்தில் எமது தமிழ் பிரதிநிதித்துவத்தை நாம் பாதுகாக்க வேண்டும். யானையுடன் பயணம் செய்த சேவல் இன்று யானையை வழிநடத்துகின்றது. எனவே, நுவரெலியா மாவட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் யானை சின்னத்தில் ஜீவன் தொண்டமானாகிய நானும், பழனி சக்திவேல் மற்றும் மருதபாண்டி ரமேஸ்வரன் ஆகியோர் போட்டியிடுகின்றோம். எனவே, உங்கள் வாக்குகளை எமக்கு அளித்து எம்மை நுவரெலியா மாவட்டத்தில் அமோக வெற்றி பெறச் செய்யுங்கள் என்றார்.

## துப்பாக்கிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் செயலாளர், அரச புலனாய்வு அமைப்பின் பணிப்பாளர், பதில் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அத்துடன் 2012, 2013ஆம் ஆண்டுகளில் தனக்கு ஏற்பட்ட கடுமையான அச்சுறுத்தல் காரணமாகவே தனிப்பட்ட பாதுகாப்புக்கருதி அனுமதிப்பத்திரத்தின் கீழ் துப்பாக்கியைத் தான் பெற்றுக்கொண்டார் என்று மனுதாரர் மேலும் தெரிவித்தார்.

'அரகலய' இடம்பெற்றபோது தனக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டதோடு அச்சுறுத்தலும் காணப்பட்டதாக அவர் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

## அமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடைசியில் அமைச்சரைத் தொடர்பு கொள்வதற்காக அனுமதி கோரி பதிவுத் தபால்மூலம் கடிதமொன்றை அனுப்பினேன், என்னிடம் உள்ள ஆவணங்களை பொறுப்பான முறையில் கையளிக்க விரும்புகின்றேன் என உதயகம்மன்பில தெரிவித்துள்ளார்.

## அநுரவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது என பிரதமர் ஹரினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அதற்குத் தேவையான சிறந்த அணியை இந்த ஆண்டு நாடாளுமன்றத்துக்கு அனுப்ப மக்கள் பாடுபடவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மஹரகம பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

75 வருடங்களாக இந்த நாட்டில் ஆட்சியில் இருந்த எவரும் தேசிய மக்கள் சக்திக்கு அதிகாரம் கிடைக்கும் என நினைக்கவில்லை எனவும், ஆனால் மக்கள் தமது குழுவுக்கு அந்த அதிகாரத்தை வழங்கியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி ஓர் அரசியல் கட்சியாக மாறவில்லை, மக்கள் இயக்கமாக மாறிவிட்டது என்றும் அவர் கூறுகிறார்.

## சர்வதேசம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தியைச் செய்ய முடியும். எமது நிலம் எமது உரிமை. அது இல்லாவிட்டால் ஒன்றுமே இல்லை.

வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் பெரும் நிலப்பரப்புக்கள் பறிபோய்க்கொண்டு இருக்கிறது. எமது போராட்டங்களின் ஊடக குறுகிய அளவை என்றாலும் நாம் காப்பாற்றிக் கொண்டிருக்கிறோம்.

எமது மதத்தை அழித்து பௌத்த மதத்தை விரிவாக்க வேண்டும் என்று இனவாதிகள் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கின்றனர். பொலிஸ், இராணுவம் என நாட்டின் அனைத்து படைகளும் அவர்களுடையது. இந்த படைகள் கொஞ்சம்கூட நீதிநியாயம் இல்லாமல். பௌத்த மதத்திற்கும் சிங்கள ஆட்சியாளர்களுக்கும் தமது விசுவாத்தினை காட்டும் நோக்கத்துடன் இயங்கிக் கொண்டிருக்கிறது.

அதற்கு மாறாக நாங்கள் களத்திலே நிற்கின்றோம். எங்களை காத்தவர்கள் இன்று மௌனிக்கப்பட்ட நிலையில் மக்களாகிய நாங்கள் எமது உரிமைக்காக போராட வேண்டிய காலம் இன்னும் தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. போராடிக்கொண்டுதான் இருக்கிறோம். தீர்வுதான் கிடைக்கவில்லை.

வடகிழக்கு தமிழர் தாயகம் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும். சர்வதேசம் பாராமுகமாக இருக்கக்கூடாது. இந்தியா பச்சோந்தி தனமாக இருக்க கூடாது. 13 வது திருத்தத்தை எமது தலைவர் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் எமது அரசியல் தலைவர்கள் வேறு என்னதான் செய்வது என்று அதனை ஏற்றுக்கொண்டார்கள். அதில் காணி அதிகாரம் இல்லை பொலிஸ் அதிகாரமும் இல்லை பிறகு எதற்காக எங்களுக்கு அந்த அதிகாரம்.

எமது நிலத்தை முழுவதுமாக பறித்து விட்டால் நாங்கள் என்ன எங்கேயும் ஓடுவதா? இலங்கை தமிழன் ஆண்ட பூமி எனவே எமக்கான தீர்வை ஏதோ ஒரு விதத்தில் இவர்கள் தரத்தான் வேண்டும் தட்டிக் கழிக்க முடியாது. எனவே இதற்கு எதிராக எமது குரல்கள் தொடர்ச்சியாக ஒலித்துக் கொண்டிருக்கும் என்றார்.

(100)

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# ஏச்பிவி தடுப்பூசி குறித்து மாணவிகள் அச்சம் கொள்ளத் தேவையேயில்லை

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுக்கும் நோக்கில் செலுத்தப்படும் ஏச்பிவி தடுப்பூசி செலுத்திய பின் ஏற்படும் பக்க விளைவுகள் குறித்து பாடசாலை மாணவிகள் தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது -

களுத்துறை பிரதேசத்தில் உள்ள ஆரம்ப பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் ஐந்து மாணவிகளுக்கு ஏச்பிவி தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னர் அந்த மாணவிகளுக்கு வயிற்று வலி, குமட்டல் மற்றும் தலைவலி போன்ற அறிகுறிகள் ஏற்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், சுகவீனமுற்ற மாணவர்களுக்கு உரிய வைத்திய சிகிச்சை வழங்கப்பட்ட பின்னர் அவர்கள் குணமடைந்துள்ளனர்.

தடுப்பூசி செலுத்தப்படும் போது மாணவிகளுக்கு ஏற்படும் அச்சம் காரணமாகவே இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதாக இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (05)

# பெண் கொலை தொடர்பில் சந்தேகத்தில் யுவதி கைது

கம்பஹா, வெலிவேரிய, எம்பறலுவ தெற்கு பிரதேசத்தில் கடந்த செப்ரெம்பர் மாதம் 58 வயதுடைய பெண்ணொருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வெலிவேரிய பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் களுபோவிட்டியான பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய யுவதி ஆவார்.

இந்தக் கொலைச் சம்பவத்தின் இரண்டாவது சந்தேக நபரான இந்த யுவதி, பாலும்மஹர பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட யுவதியிடமிருந்து இருந்து 05 கிராம் 600 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிவேரிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# நீதிமன்றில் பணம் திருட்டு குருணாகலில் சம்பவம்

குருணாகல், வாரியப்பொல நீதிவான் நீதிமன்றத்தின் வழக்கு பொருள்களை வைக்கும் அறையிலிருந்து 02 லட்சத்து 55 ஆயிரம் ரூபா திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் வாரியப்பொல பொலிஸ் நிலையத்திற்கு வியாழக்கிழமை முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளது.

வாரியப்பொல நீதிவான் நீதிமன்றத்தின் அதிகாரி ஒருவரால் இந்த முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த திருட்டு சம்பவம் கடந்த ஜூலை மாதம் 7 ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இடம்பெற்றிருக்கலாம் என முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் வாரியப்பொல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# யாழில் பிறந்து 45 நாள்களான பச்சிளம் சிசு பரிதாபச் சாவு

யாழ்ப்பாணத்தில் பிறந்து 45 நாள்களேயான பெண் குழந்தை ஒன்று வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளது.

தவசிகுளம் - கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த குழந்தையே உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

கடந்த 16ஆம் திகதி குழந்தைக்கு உடல் சுகவீனம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் பெற்றோர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு குழந்தையை கொண்டு சென்றனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக குழந்தை யாழ்ப்பாணம் போதன வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டது.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி குறித்த குழந்தை வெள்ளிக்கிழமை பரிதாபமாக உயிரிழந்தது. குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி மேற்கொண்டார்.

குழந்தையின் இறப்புக்கான காரணம் கண்டுபிடிக்கப்படாத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.(05)




# அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் பேரவையில் இலங்கை பிரதிநிதிகளும்



சுவிட்ஸர்லாந்தின் ஜெனீவா நகரில் 13 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை நடைபெற்ற 149ஆவது அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் பேரவையில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கை நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மற்றும் பணியாட்தொகுதியின் பிரதானியும் பிரதி செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன ஆகியோர் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற ஒத்துழைப்பு மற்றும் நிர்வாகத்தை முன்னேற்றுவதற்கான உலகளாவிய அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டும் வகையில் 130 நாடுகளைச் சேர்ந்த 630 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதில் கலந்துகொண்ட இலங்கை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மற்றும் பணியாட்தொகுதியின் பிரதானியும் பிரதி செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன ஆகியோர் முக்கியமான கூட்டங்களிலும் சந்திப்புக்களிலும் பங்குபற்றினர்.

இம்முறை பேரவையில் 54 நாடாளுமன்ற சபாநாயகர்கள், 36 பிரதி சபாநாயகர்கள், 36 வீத பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் 45 வயதிற்குக் குறைந்த 25 வீத பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற வகிபங்கில், உள்ளடங்கிய தன்மை மற்றும் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துவதற்கான கூட்டு அர்ப்பணிப்பை பலதரப்பட்ட பிரதிநிதிகளின் பங்களிப்பு கோடிட்டுக் காட்டுகிறது.

பொது மாநாடு, நாடாளுமன்ற செயலாளர் நாயகங்களின் சங்கத்தின் கூட்டம், ஆசிய-பசுபிக் குழுக் கூட்டம், நிலைபேறான அபிவிருத்தி பற்றிய நிலைக்குழுக் கூட்டம் மற்றும் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மன்றம் உள்ளிட்ட பிரதான கூட்டங்களில் இலங்கைப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இலங்கை பிரதிநிதிகளின் பங்கேற்பு உலகளாவிய நாடாளுமன்ற நடைமுறைகள் மற்றும் சவால்கள் தொடர்பில் பெறுமதியான பங்களிப்பை ஏற்படுத்தியது.

இதன்போது இலங்கைப் பிரதிநிதிகள் அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் தலைவர் கலாநிதி டுலியா அக்சன், பாலின கூட்டு நிகழ்ச்சித்திட்ட ஆலோசகர் பிரிகிட் பிலியோன், அனைத்துப் நாடாளுமன்ற ஒன்றியத்தின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட அதிகாரி இஸபெல் ஒபாடியாரு ஆகியோருடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.

அத்துடன், சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் அணுசக்திப் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி எலெனா பக்லொவாவை சந்தித்ததுடன், பூட்டான் தேசியப் பேரவையின் செயலாளர் நாயகம் டுபாவுடன் இரு தரப்பு சந்திப்பிலும் இலங்கைப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

அமைதியான மற்றும் நிலைபேறான எதிர்காலத்திற்கு அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தை பயன்படுத்துதல் எனும் தொனிப்பொருளில் பொது விவாதம் இடம்பெற்றது. இது கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கும், அழுத்தமான உலகளாவிய பிரச்சினைகள் தொடர்பில் விவாதிப்பதற்கும், நிலையான வளர்ச்சியை நோக்கிய நாடாளுமன்ற நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கும் ஒரு முக்கிய தளத்தைப் பிரதிநிதிகளுக்கு வழங்கியது.

இந்தப் பேரவையில் இலங்கைப் பிரதிநிதிகளின் பங்கேற்பானது, சர்வதேச ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும், பகிரப்பட்ட சவால்களைச் சட்டமன்ற உரையாடல் மூலம் எதிர்கொள்வதற்கும் இந்நாட்டின் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.10.2024இல் வெளியிடப்பெற்றது